

# மின்மினி



பிப்ரவரி 2019 மின்னல் 02, கதிர் 02

## சங்கமம் தமிழ்ப்பள்ளி

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு"
... குறள்: 72

### நிகழ்வுகள்

**ஜனவரி 19th 2019**
பேச்சுப்போட்டி
10.30 AM – 12.30 PM (Mercer Middle School, Virginia)

**மார்ச் 16th 2019**
திருக்குறள் போட்டி
10.30 AM – 12.30 PM (Mercer Middle School, Virginia)

### பள்ளி நிர்வாகக் குழு

**திரு. சாந்தகுமார்**



**திரு. மனோஜ்**



**திருமதி. இந்திரா**



**திருமதி. மஞ்சு**



**திரு. சரவணபவன்**



### பள்ளி நிதிக் குழு

**திருமதி சங்கீதா**



**திரு சாய்**









இந்த ஆண்டு லௌடௌன் கவுண்டி நடத்திய World Language Credit Exam தேர்வில் **ஸ்மிதா ஜேம்ஸ்** தேர்ச்சி பெற்றுள்ளார். இரண்டு கட்டுரைகள் அழகாக எழுதி தேர்ச்சி பெற்றமைக்கு வாழ்த்துக்கள் **ஸ்மிதா ஜேம்ஸ்**.

**தமிழ்** மொழியை அயல்சூழலில் வாழும் தமிழ்க் குழந்தைகள் கற்றுணர்ந்து, தம் அடையாளத்தை பெருமையோடு கொண்டாடி வளரவேண்டும் என்ற நோக்கத்துடன் **2014** ஆண்டு நமது **சங்கமம் தமிழ்ப்பள்ளி** தொடங்கப்பட்டது. **2014 லில்** சுமார் **35 மாணவர்கள்** சேர்க்கையிலிருந்து இன்று **160 க்கும்** மேலாக வளர்ந்து வெற்றிகரமாகச் செயல்படுகிறது. தரமான பாடத்திட்டம் மற்றும் ஆசிரியர் கலந்தாய்வுக்கூட்டம் மூலமாக மிகச்சிறப்பாக செயல்பட்டுவருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

நமது பண்டைத் தமிழ் கலாச்சாரமான **இயல், இசை, நாடகம், நடனம்** என பிள்ளைகள் தம் பன்முகத் திறனை மேடையேற்ற உதவுகிறோம்.
**தமிழார்வமுடைய யாவரும் எம்முடன் இணைந்து உதவலாம்.**













உயிர் எழுத்துக்கள் வரிசையின் மூலம் முயல் எப்படி கேரட்டை சென்றடையும்? கண்டுபுடிங்க பார்ப்போம்!



| | | | |
|---|---|---|---|
| அ ○ | ஆ ○ | இ ○ | ஈ ○ |
| ஆ ○ | உ ○ | ஈ ○ | ஐ ○ |
| எ ○ | ஊ ○ | ஃ ○ | ஒ ○ |
| ஏ ○ | எ ○ | ஏ ○ | ஊ ○ |
| இ ○ | ஒ ○ | ஐ ○ | அ ○ |
| உ ○ | ஓ ○ | ஔ ○ | ஃ ○ |





















வண்ண வண்ண கலவையிலே
பல வண்ணமலர் இடலாம்!
புதுப்புது சிந்தனையில் பல
வடிவங்கள கற்பனையில் தீட்டலாம்!
இதோ என் தோழியின் அழகிய
கோலம்!
சம்யுக்தா
நிலை-4










# எனக்கு பிடித்த பொம்மை – ஷ்ரியா, ரிஷி, கௌதம், கௌரவ்




## போகி பொங்கல்





## சூரிய பொங்கல்





## மாட்டு பொங்கல்




## காணும் பொங்கல்



காணும் பொங்கல் என்பது பொங்கல்
கொண்டாட்டங்களில் நான்காவது
நாள் இடம்பெறும் விழா ஆகும். காணும்
பொங்கலைக் கன்னிப் அல்லது கணுப்
என்றும் அழைப்பர். இப்பண்டிகையின்
நிகழ்வுகளில் உற்றார், உறவினர்,
நண்பர்களைக் காணுதல் மற்றும்
பெரியோர் ஆசி பெறுதல் என்பன
அடங்கும். பலவேறு விளையாட்டுப்
போட்டிகள், பட்டிமன்றம், உறியடித்தல்,
வழுக்கு மரம் ஏறல் போன்ற வீர[illegible]
போட்டிகள் உட்படப் பலவேறு
நிகழ்ச்சிகள் இடம்பெறும்



① கருப்பு சட்டைக்காரன், காவலுக்கு கெட்டிக்காரன்.
அவன் யார்?

② இதயம் போலே துடி துடிக்கும். இரவு பகல்
விழித்திருக்கும். அது என்ன?

③ அழகான பெண்ணுக்கு அதிசயமான வியாதி
பாதிநாள் குறைவாள், பாதிநாள்
வளர்வாள். அவள் யார்?

④ உடம்பில்லா ஒருத்தன் பத்து சட்டை
அணிந்திருப்பான் அவன் யார்?

ஆக்ரிதி
நிலை-5

## தமிழ் விடுகதைகள்

1. அம்மாளோ சும்மா படுத்திருப்பாள். மகள் மூன்றும் பின்றும்
ஓடி கொண்டிருப்பாள். அவர்கள் யார?

2. எண்ணும் முள்ளும் இல்லாத கடிகாரம்.
யாரும் பார்க்க முடியாத கடிகாரம். அது என்ன?

3. பட்டையை பட்டையை நீக்கி பதினாறு பட்டையை நீக்கி
முத்து பட்டையை நீக்கி முன்னே வாறான் சீமாட்டி. அவள் யார்?

4. சூடு பட்டு சிவந்தவன். வீடு கட்ட உதவுவான்
அவன் யார்?

காலையில் வந்த விருந்தாளியை மாலையில் காணவில்லை. அது என்ன?

ஓய்வு எடுக்காமல் இயங்கும். ஓய்வு எடுத்து விட்டால் மறுபடியும் இயங்காது. அது என்ன?

பூ பூக்கும், காய் காய்க்கும். ஆனால் பழம் பழுக்காது. அது என்ன?

விரல் இல்லாமலே ஒரு கை. அது என்ன?

யாழினி
ராஜேஷ்குமார்
நிலை - 5

1) முழு உலகமும் சுற்றி வரும், ஆனால் ஒரு மூலையிலேயே இருக்கும் அது என்ன?

2) சில இடங்களில் ஒட்டப்பட்டிருக்கும் அதை வாசித்தால் அதன் அர்த்தம் புரிந்து விடும், அது என்ன?

3) கண் உண்டு, ஆனால் பார்க்க முடியாது? அது என்ன?

4) படபடக்கும் பளபளக்கும் மனதுக்குள் இடம் பிடிக்கும் அது என்ன?

# பொங்கலோ பொங்கல்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ம | ஞ் | ச | ள் | டு | உ | தை | மா | த | ம் |
| வி | கி | ய | பு | ட் | டி | ழ | பா | னை | கி |
| வ | ண் | ண | ம் | ஜ | வ | டை | வ | று | அ |
| சா | மி | ட் | ரு | ல் | ய | ரை | டு | ர் | ட் |
| ய | ய | டு | க | லி | க | ட் | கி | போ | ப |
| ம் | வ | ங் | கி | க் | டி | தூ | வ | ய | ண் |
| ய | பொ | லை | ச | க | ம் | ச | ரி | டு | டி |
| கி | ட் | இ | டி | ட் | ய | பா | கி | ய | கை |
| ச | டு | மா | ய | டு | ல் | வ | ச | டி | ன் |

ஆங்கில வார்த்தைகளை தமிழில் மொழி பெயர்க்கவும். பின் அந்த தமிழ் வார்த்தைகளை கட்டத்தினில் கண்டுபிடிக்கவும். Translate the words to Tamil and find them in the puzzle.

Bogi
Pongal
Farmer
Farming
Sugarcane
Festival
Jallikattu
Cow
Turmeric
Pongal Month

Milk
Sun
MangoLeaf
Harvest
Sugar
Color
Dot
God
Pot



சாத்விக்/ஹர்ஷத்-நிலை6


# கடல் வார்த்தை தேடல்

**சாரா & சகீல் அப்துல்கரீம்**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ங | க | க | ட | ள் | சு | ற | ன | ட | ண |
| அ | இ | ட | ஔ | எ | ண் | ம | ன | ல் | இ |
| ஔ | ஒ | ஒ | ல் | ங | ப் | ர | சா | சு | றா |
| ஜ | ஞ | ப | ப | வி | ஹ | ண | ரா | உ | மா |
| அ | ப் | ப் | றே | ள | ல | கீ | னை | மீ | கே |
| க | அ | ஞ | ம | ல் | மீ | ங் | ண் | ம | க |
| த | ச | றா | ண | ரா | ஷ | மீ | கு | ன | ட |
| ஙை | ற் | க | ல் | ன் | ணா | ழை | வா | க | ல் |
| க | ப் | ப | ள் | மீ | வி | ல | ங் | கு | ள் |

**எழுத்துப்பிழை இல்லாத வார்த்தையை மேலே உள்ள கட்டத்தில் கண்டு பிடிக்கவும்.** (Identify the correct spelling and search for that word in the above grid.)

1. Sea
   a. கடல்
   b. கடள்
2. Ship
   a. கப்பள்
   b. கப்பல்
3. Sea Animals
   a. கடல் விலங்குகள்
   b. கடள் விளங்குகல்
4. Fish
   a. மீன்
   b. மீண்
5. Sand
   a. மனல்
   b. மணல்
6. Shark
   a. சுறா
   b. சுரா







ஆக்ரிதி கார்த்திக்கின் ஓவியம் தமிழ் சங்கம் தென்றல் முல்லை இதழில் வெளியிடப்பட்டது.

தங்கள் குழந்தைகளுக்கும் ஆர்வம் இருப்பின் தமிழ் சங்கம் நடத்தும் போட்டிகளில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

# நான் எது பற்றி எழுதலாம்?

நான் இந்தக் கட்டுரையை இன்றைக்கே எழுதி முடிக்கவில்லை என்றால், என் அம்மா என்னை தொலைத்தே விடுவார்கள். இந்தக் கட்டுரையை எழுதுவதற்கு, என்னை இரண்டு வாரங்களாக தொல்லை படுத்திட்டு இருந்தார்கள். இதற்கு மேல் என் அம்மாவின் தொல்லை தாங்கமுடியாமல், இன்னிக்கு நான் ஒரு கட்டுரையை எழுதுவேன் என்று ஒரு முடிவு எடுத்திருக்கேன்.

ஆனால், ஒரு சிறிய பிரச்சினை. அது என்னவென்றால், நான் எது பற்றி என் கட்டுரையை எழுதுவது என்று தெரியவில்லை. அது போதாதுனு, எனக்கு பசி வேற வந்திருக்கிறது. ஆஹா! எனக்கு ஒரு மிகவும் அற்புதமான யோசனை வந்திருக்கிறது! என் கட்டுரையில் பல வகையான உணவுகள் பற்றி எழுதினால் எப்படி இருக்கும்? சிறிய கடைகள் மற்றும் கடைத்தொடர் கொண்ட, தடிமனான, நெரிசல் நிறைந்த தெருவில் நடந்து செல்லும்போது, பல்வேறு வீதி உணவுகளின் நறுமண வாசனைகள் என்னை கவர்ந்திழுக்கிறது. காரமான பிரியாணி மற்றும் சுவையான பரோட்டாக்களின் ருசியான வாசனை. சூடான வடித்த தேநீரின் இனிப்பு வாசனை... இல்லை, இல்லை வேண்டாம். அது என்னோட பசியை அதிகரிக்கிறது.

சரி, இந்த கட்டுரை உணவு பற்றி எழுதமுடியாது என்றால், எது பற்றி எழுதலாம்? ஐயோ! இந்த கட்டுரைக்கு ஒரு தலைப்பு இருந்திருந்தால் நல்லா இருந்திருக்கும். என்னென்னமோ பற்றி எழுதலாம், அதனால் தான் கஷ்டமாக இருக்கிறது. பல வகையான தலைப்புகள் இருப்பதனால், எதை தேர்வு செய்யனும் என்று தெரியவில்லை. என் கட்டுரையை ஒரு பெரிய, பஞ்சுபோன்ற, ஊதா தக்காளியை பற்றி எழுதலாம். இல்லை, ஒரு சிறிய, பாடும், சூரியகாந்தி வண்ணத்தின் உள்ள குரங்கு பற்றியும் எழுதலாம். அல்லது, ஒரு வேளை என் கட்டுரை பஞ்சு மிட்டாயில் செய்யப்பட்ட மேகங்கள் பற்றி எழுதினால் எப்படி இருக்கும்?

சரி, இந்த கட்டுரையின் தலைப்புக்கு யோசனைகள் அளவுக்கு மேல் வந்திருக்கிறது என்று நான் நினைக்கிறேன். அதனால், என் நேரத்தை வீணாக்குவதை நிறுத்திவிட்டு, நான் ஒரு பென்சில் மற்றும் ஒரு காகிதத்தை எடுத்து, என் கட்டுரையை எழுதப் போகிறேன். அடுத்த முறை வரை...

- கயல் சதாசிவம் ♥